**O.S.No. 93/2018**

**DW 1 :** சுந்தரமூர்த்தி தேதி 16.3.2026

பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

அ.வ.எண்.282/87 வழக்கு 1.2.87 தேதிய உயில் சாசன வழக்கு என்றால் சரிதான். 1.2.87 உயில் சாசனம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் என்னால் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. என் தாத்தா முத்துகவுண்டரின் விருப்பத்தின் பேரில் 1.2.87 உயில் சாசனம் அவரால் எழுதி வைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 1.2.87 உயில் சாசனம் சரியான வகையில் என்னால் நிரூபிக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. முத்துகவுண்டரின் வாரிசுகளான வாதிகளை மேற்படி வழக்கில் சேர்த்திருந்தால் உண்மை தெரிந்திருக்கும் என்பதால் தான் இவ்வழக்கின் வாதிகளை அ.வ.எண்.282/87 வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நானும் என் அப்பாவும் சேர்ந்து வாதிகளை ஏமாற்றும் எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.282/87 தீர்ப்பு இவ்வழக்கின் வாதிகைள கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வாதிகளின் பங்கை ஏமாற்றும் எண்ணத்தில் தான் நானும் என் அப்பாவும் சேர்ந்து 1.2.87 உயில் சாசனத்தை மோசடியாக உருவாக்கி இருவரும் கூட்டு சேர்ந்து அ வ எண் 282/87 தீர்ப்பு பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. பிவாசாஆ 2 மற்றும் பிவாசாஆ 3 கிரைய பத்திரங்கள் பூர்வீக சொத்தின் வருமானத்தை கொண்டு என் தாத்தா முத்துகவுண்டரால் கிரையம் பெற்றவை என்று சொன்னால் சரியல்ல. மோசடியாக தயாரிக்கப்பட்ட உயில் சாசனத்தை பிவாசாஆ 5, 9, 10,15,16,18,20 ஆவணங்கள் தாவா சொத்தில் இவ்வழக்கின் வாதிகளின் பங்கை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதிகளின் பங்கை ஏமாற்றும் எண்ணத்தில் நான் என் மனைவி பெயரில் எழுதி வைத்த பிவாசாஆ 21 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

பிவாசாஆ 21 ன் படி உரிமை மூலம் என் மனைவிக்கு ஏற்படவில்லை என்றும் சுவாதீனமும் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பிவாசாஆ 1 ஆவணம் 1,2,4 வாதிகளால் எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. நான் வெற்று தாளில் கையெழுத்து வாங்கி கொண்டு மோசடியாக உருவாக்கி கொண்டேன் என்றால் சரியல்ல. பிவாசாஆ 1 ல் சொல்லியுள்ள விவரங்களுக்காக வாதிகள் கையெழுத்திடவில்லை என்றால் சரியல்ல. 18.9.2009 தேதிய பிவாசாஆ 17 கிரைய ஆவணத்தின் படி சுவாதீனம் ஒப்படைக்கப்படவில்லை என்பதால் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்துகள் நாளது வரை பாகப்பிரிவினை ஏற்படாமல் வாதிகள், நானும், 2 ம் பிரதிவாதியும் பொதுவில் அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துகளில் உள்ள வாதிகளின் பங்கை ஏமாற்றும் எண்ணத்தில் பொய்யான ஆவணங்களை உருவாக்கி பொய்யாக எதிர் வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் பொய் சாட்சியம் என்றால் சரியல்ல.